முருகப்பெருமான் துணை

**மகான் கடுவெளிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.10.2022**, வெள்ளிக்கிழமை

1. தன்னார்வ தொண்டு மிக்க
   தனித்துவம் கொண்ட நல்ல
   மண்ணுலகில் ஞானவான்களை
   மாதவசி நீ படைக்கும் வண்ணம்
2. வண்ணமுடன் அருளி வருக
   வள்ளல் உன் பெருமை கூறி
   மண்ணுலகில் அனுகூல ஆசி
   மார்க்கமுடன் சுபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே இருபான்திகதி புகர்வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் **20** ம் நாள், **07.10.2022** வெள்ளிக்கிழமை)
   தேசிகனுக்கு கடுவெளிச்சித்தர் யானும்
   இங்கனமே ஞானஉலகம் அமைய
   இயம்பிடுவேன் உலகோரை நோக்கி
4. நோக்கியே அரங்கன் அவதாரம்
   நிலவுலகை மாற்றும் முகமாக
   ஆக்கமுடன் தரும ஞான வழி
   அகிலமெங்கும் பரப்பி வர
5. வருகின்ற மார்க்கம் தன்னை
   வணங்கி மக்கள் ஏற்று
   தருகின்றேன் சரணாகதி என
   தரணியோர் இணைந்து வர
6. வருகவே அவரவர் தனக்குள்
   வள்ளல் தன்மை பெருகி
   முருகப் பெருமான் அருள்தயவும்
   முழுமை ஞானமாகக் கிட்டி
7. கிட்டியே கலியுக மக்கள்
   குருவரங்கன் ஆசிபலத்தால்
   தட்டாது ஞானிகள் ஆகவே
   தனித்துவம் அடைதல் கண்டு
8. கண்டுமே உலகை மாற்றும்
   கந்தவேலன் மகா சக்தியாக
   தொண்டுவழி உயர்ந்து இனிதே
   தெரிவிப்பேன் ஞானயுகம் படைப்பர்
9. படைக்கவே அன்னதானமெனும்
   பசிபிணி விரட்டும் சேவை
   தடையின்றி அகிலம் எங்கும்
   தவராஜன் சக்தியாகப் பரவ

10. பரவவே சடுதி மாற்றம்தனை
பாருலகம் தானாகக் கண்டு
அறமே வடிவாக நிறைந்த
ஆளுமையும் ஞான ஆட்சியாக

11. ஆகவே மாற்றம் கண்டு
அகிலம் அற்புதம் காண்கும்
மிகைகயான பாதுகாப்புதனை தரும்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–